1980 ஜூன் 26]

பிறகும் தொடர்ந்து அவர்கள் இருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். சட்ட மன்றத் துறை சார்பாக மூன்று தடவைகளுக்கு மேல அவர்களுக்கு நோட்டீஸ்கள் விட்டும் காலி செய்யாமல் இருக்கிறார்கள். இறுதியாக 30-ம் தேதிக்குள்ளாக கட்டாயம் அவர்கள் காலி செய்யவேண்டும் என்றும் இல்லாவிட்டால் பலவந்தமாக பூட்டை உடைத்து உள்ளே இருக்கிற சாமான்களை வெளியே வைத்துவிட்டு காலி செய்யப்படும் என்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் வழங்கப் பெறும் அரிசியின் தரம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பொருள் குறித்து தங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், குத்தாலம் ஒன்றியத்தில் வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற அரிசியை நான் இங்கே கொண்டுவந்திருக்கிறேன். அந்த அரிசி மனிதர்கள் சாப்பிடுவதற்கு லாயக்கானதுதானா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த அரிசியில் இருக்கிற புழுக்கள் மட்டும் செத்திருக்கின்றன. தங்களிடம் இந்த அரிசிப் பொட்டலத்தைத் தருகிறேன். அதை மனிதர்கள் சாப்பிடலாமா என்பதைத் தங்கள் மூலம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

(பொட்டலம் பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பெற்றது.)

3. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன் :—

1. திரு. இரா. முத்தையா.
2. திரு. கோ. விஸ்வநாதன்.
3. திரு. பெ. சு. திருவேங்கடம்.
4. திரு. உ. சுப்பிரமணியன்.